# A. Nasbullah Poems

The night and the day
I eat
and am reciting poetry



Translated by
**Sri N Srivatsa**

# A. Nasbullah

poems

Translated by :

**Sri N Srivatsa**

எதிர் பிரதிகள்

**A. NASBULLAH POEMS**

○ Poems ○ A. Nasbullah (+94 077 6751510) ○ © Author ○ First Edition: 2018 ○ Publication: Ethir pirathigal, Kinniya, Cell Phone: 077 6751510, E-Mail: ethirpirathigal@gmail.com, ○ Layout & Cover Designed: M.A.M. Asmy (+9475 7022680) ○ Printed By: Excellent Print, 077 6401296 ○ Page: 157, Price: ○ 350/- ○ ISBN: 978-955-7181-00-4

## ஏ. நஸ்புள்ளாஹ் (1974)

*கிழக்கிலங்கையில் கிண்ணியாவில் பிறந்தவர். உயர்தரம் வரை கல்வி கற்று தற்போது நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையில் மானி வாசிப்பாளராக கடமையாற்றி வருகிறார்.*

*இது இவரது ஏழாவது நூல். முந்தைய தொகுப்புக்கள் துளியூண்டு புன்னகைத்து (கவிதை 2003) நதிகளைத் தேடும் சூரிய சவுக்காரம் (கவிதை - 2009), கனவுகளுக்கு மரணம் உண்டு (கவிதை - 2011), காவி நரகம் (சிறு கதை - 2013), ஆதாமின் அப்பிள் (கவிதை - 2014), இங்கே சைத்தான் இல்லை (கவிதை - 2015), ஹிட்லர் சிலருக்குப் பிடிக்காத பெயர் (கவிதை - 2016), மின்மினிகளின் நகரம் (கவிதை - 2017), ஆகாய வீதி (கவிதை - 2018), ஏ.நஸ்புள்ளாஹ் கவிதைகள் (மொழிபெயர்ப்புக் கவிதை - 2018)*

**A. Nasbullah,**
**Fizal Nagar,**
**Kinniya,**
**Sri Lanka,**
**Tel:** 0094765277202
**Email:** ethirpirathigal@gmail.com

## நன்றி

திணை, காலம், நடு, காலச்சுவடு, ஆனந்த விகடன், குறி, படிகம், நெல்லை பரணி, பதாகை, கீற்று, மலைகள், கொலுசு, வீகேன் புக்ஸ், புது விதி, புன்னகை, சமூக உயிரோட்டம்

ஜமீல், நியாஸ் குராணா, லதா ராமகிருஸ்ணன், ஏ.எம்.எம்.அலி, கோ.பாரதி மோகன், கு.இலக்கியன், செருகுடி செந்தில், முகம்மது இம்ரான் அஸ்ரப், நவாஸ் சௌபி, மாசிலா மணி, குமார் கந்தசாமி, முகம்மது வாட்ஸா, எஸ்தர், கிண்ணியா சபறுள்ளா, ஜே. பிரோஸ்கான், ஏ.க. முஜாரத், எம்.ரீ. சஜாத், பாலமுனை முபீத், ரஹ்மத்துள்ளாஹ் எஸ்.ரீ.ஆர், சாஜித் அஹமட், இமாம் அத்னான், பாயிஸா அலி, முகம்மது நஸீம், எம்.ரீ. சபறுள்ளா கான், குரல் நியாஸ், எம்.ஏ.ம். அஸ்மி, குவைஸிர் முஹைறதீன், அனாதியன்,

Poetry keeps me alive. It gets me going through the roughest and toughest passages in time. Good poetry is like the divine nectar; like a rainbow, like the smile of an infant. Good poetry is an inexplicable emotion like love which can only be experienced and seldom explained in mere words.

A person has to undergo a lot in life before being able to pen meaningful poetry. A lot of hardship, heartache and heartbreak go into the making of a sensitive poet.

It's in the endeavour to try to contribute my mite to poetry that I took to translating good poems in Tamil that I came across into English.

It was the content, lucidity and clarity in A. Nasbullah's poetry that urged me to seek permission to translate his poems and I was very happy when he readily consented to my request.

It wasn't an easy road to travel, given that the poet had used words not much in vogue in India itself but widely used in his native Srilanka. Time and again, I sought and got clarifications from him.

Egged on by the response from poetry loving friends, he suggested that I translate a minimum of forty poems to be published in print form. It took us Time, but we did it.

My thanks go not only to A. Nasbullah but also all our friends who read the original together with an English translation and made encouraging comments on Facebook.

**Sri N Srivatsa**

அனைத்து மொழி இலக்கியங்களும் பெரும்பாலும் புனைவுதான். அதன் வரலாறுகளும் புனைவுதான். ஆனாலும் தமிழ் மொழிக்கென்று கோட்பாடுகளும் கவிதை முறைமைகளும் இருக்கின்றன. குறிப்பாக அண்மைய சூழலில் கவிஞர்கள் மாய மொழிகளையும் கனவுலக உரையாடல்களையும் கவிதை தயாரிப்பதன் மூலமாக வாசிப்பாளனுக்கு கண் முன் நிறுத்துவதை அவதானிக்க முடியும்.

தமிழ் இலக்கிய சூழலில் பின் நவீனத்துவ புனைவு உத்திகளைக்கொண்டு கவிதைகளை தயாரித்தும் பேசத் தொடங்கியும் முடிவுறா தருணமொன்றில் பின் நவீனத் துவத்தின் புனைவு அசாத்தியங்களை கவிதைகளிலும், உரையாடல்களிலும் முன்வைத்தும் வரும் தோழர் றியாஸ் குரானா தமிழ் இலக்கிய சூழலில் முக்கிய அடையாளம்.

இலக்கிய உரையாடலை உருவாக்கியதில் றியாஸ் குரானாவுக்கு தனி இடமுண்டு. இவை மட்டுமல்லாமல் பல நல்ல கவிதைகள், கவிதை குறித்த கட்டுரைகளை தமிழ் இலக்கிய சூழலுக்கு தந்து கொண்டிருக்கிறார். அவரது புனைவில் பலரும் கவரப்பட்டதற்கு சான்றாக அண்மைய ஈழத்துக் கவிதைகளை முன்வைக்க முடியும். குறிப்பாக அவரது கவிதைப் போக்கை உள்ளெடுத்து ஒன்றிணைந்ததாகவும், அதை மேலும் செழுமைப்படுத்தும் முயற்சியிலும் எழுதுபவர்களை ஒரு உரையாடலின் போது

அடையாளப்படுத்தினார். அவர்கள் அஃமது பைஸால், ஏ.நஸ்புள்ளாஹ், இமாம் அத்னான், ஜெம்ஸித் ஸமான் மேலும் மாற்றங்களை நிகழ்த்தி வரும் ஜமீல், அன்வர் புஹாரி, நப்லா, ஜே.பிரோஸ்கான், முபாரக் நிமா என அடையாளமிட முடியும்.

கவிதைகளின்பால் தீவிர வாசிப்பு தமிழ் இலக்கிய சூழலின் பழைய உற்பத்தியை அல்லது தொன்மவடிவ மீள் உருவாக்கத்தினை நவீனமாக முற்றிலும் மாய மொழியைக் கொண்டும் கனவுலக உரையாடல்களைக் கொண்டும் எனது கவிதைகளை தந்திருக்கின்றேன். இவை மட்டுமல்லாமல் வாசிப்பாளன் தேடும் நுண் அரசியல் சதுரங்கமும் எனது கவிதை வரைபடத்துக்குள் வந்திருக்கிறது என நம்புகிறேன்.

இந்த வடிவத்தை எனக்குள் துவங்கி வைத்த அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வுக்கு என் முதல் நன்றியும் பேரன்பும் மேலும் விரிந்த இலக்கிய சூழலில் எனது கவிதைகளை தேரர்ந் தெடுத்து மொழிபெயர்ப்பு என்கிற இத்தனை பெரிய விடயத்தை எந்தவித எதிர்பார்ப்புமில்லாமல் செய்த மரியாதைக்குரிய ஸ்ரீ என் ஸ்ரீவத்ஸா அவர்களுக்கு அன்பை ஆறத் தழுவுகின்றேன்.

**ஏ. நஸ்புள்ளாஹ்**

## THE MOUNTAIN EATERS

I cross a rivulet
and reach the valley
where you live.
You are eating
a mountain.
Realising that
the mountain
is not enough
to satiate your hunger,
God makes the mountain
grow again and again.
Your hunger does not
appear to diminish.
You drink the oceans
one by one.
You are still hungry.
Ultimately,

as your food is exhausted,
you ask for a little more
of the mountain and the sea.
Your time is up, says He.
You wish to devour
my mountains
and drink up my seas.
They had come
from within your earshot,
to escort your soul.
You go.
I shall follow.
My mountains and oceans
will be devoured
and drunk up
one day.
You go.
I too will go.
In the second space,
let us meet for the second time.
Meharoon from Class Eight
will come behind us.

Sri 17:43 | 06.02.2018 | Chennai

## மலையைத் தின்று முடிப்பவர்கள்

சிற்றாறொன்றை
கடந்து நீ வசிக்கும்
வெளியை வந்தடைகிறேன்
நீ மலையை தின்று கொண்டிருக்கிறாய்
உனது பசிக்கு
மலைபோதாதென்று
உணர்ந்த கடவுள்
மலையை மீண்டும் மீண்டும்
வளரச் செய்கிறான்
உனக்கோ
பசியடங்கியதாய்த் தெரியவில்லை
கடல்களை ஒவ்வொன்றாய் குடிக்கிறாய்
உனக்கு பசியடங்கவில்லை
கடைசியில்
உனது
உணவு முடிந்துவிட்டதாய்
நீ கடவுளிடம்
இன்னும் கொஞ்சம்
மலையும் கடலும் கேட்கிறாய்
அவன்

உனது நேரம்
முடிந்துவிட்டதாக சொல்கிறான்
உனக்கோ
எனது மலையை தின்னவும்
எனது கடல்களை
குடித்துவிடவும்
பெரும் ஆசை
உனக்கு கேட்கும் தூரத்திலிருந்து
அவர்கள் வந்திருந்தார்கள்
உன் ஆத்மாவை அழைத்துப் போக
நீ போ
பின்னால் நானும் வருகிறேன்
எனது மலையும்
கடல்களும் ஒருநாள்
தின்னப்பட்டும் குடிக்கப்பட்டும் விடும்
நீ போ
நானும் வருகிறேன்
இரண்டாம் வெளியில்
இரண்டாம் முறை சந்திப்போம்
எட்டாம் வகுப்பு
மெஹரூனும்
நமக்குப் பின்னால் வருவாள்.

## Forced entry

On a blank paper
lying on the table,
I draw a deep sea.
On its lips I see
a river resting,
koels correcting
centuries of helplessness
by building nests
with the music of the rain
and, contrary to ancient rules,
crows getting ready
to lay eggs in koel nests.

A gale wind making
a forced entry
carries the painting
past me
into the mouth
of the rain
pouring for a week
and the rain
swallows the painting.
Disturbed,
my big dream
starts flying
in just a short while.

Sri 11:02 | 06.02.2018 | Chennai

# அத்து மீறல்

மேசையில் கிடந்த
வெற்றுத்தாளில்
ஆழ்கடலொன்றை வரைகின்றேன்
அதன் உதடுகளில்
நதியொன்று ஓய்வெடுத்துக் கொண்டிருப்பதையும்
மழையின் இசையில்
குயில்கள் கூடுகட்டி
நூற்றாண்டு இயலாமையை
சரி செய்து கொண்டிருப்பதையும்
ஆதியின் விதிமுறைக்கு மாற்றமாய்
குயில்களின் கூட்டில்

காகங்கள் முட்டையிட தயாராகுவதையும்
நான் காண்கிறேன்
பெரும் காற்றின்
அத்து மீறலொன்றில்
ஓவியம்
என்னைக் கடந்து சென்று
ஒரு வாரகாலமாய் நீளுகிற
மழையின் வாயில் விழுந்துவிட
மழை ஓவியத்தை தின்றுவிடுகிறது
சற்று நேரத்தில்
கலைந்து பறக்க துவங்குகிறது
என் மஹா கனவு.

## PET CAT

Raindrops awaken
my pet cat
curled up
outside.
The cat comes
and sits down to
sleep
by the side of
my pillow.
Since am not fond
of the cat's mewing,

I let the cat sleep
in the cupboard,
grab the moon
and light it up
instead of a cigarette
and sip in the flavour.
In the smoke
of the moon
I exhaled,
a cat
revives.

Sri 21:21 | 04.02.2018 | On board the Blue Mountain Express to Chennai

## வளர்ப்புப் பூனை

வெளியே சுருண்டு
படுத்துக் கிடந்த
எனது வளர்ப்புப் பூனையை
மழைத் துளிகள் எழுப்பி விடுகின்றன.
பூனை
என் தலையணைக்கு
அருகில் படுத்துறங்க
வந்தமர்கிறது
பூனையின்
"மியாவ் மியாவ்" சப்தம்

பிடிப்பதில்லையென்பதால்,
நானோ
பூனையை
அலமாரியில் தூங்க வைத்துவிட்டு
சிகரெட்டிற்கு பதிலாய்
நிலவை பிடித்து
பற்ற வைத்து ருசி அருந்துகிறேன்
நான் இழுத்துவிட்ட
நிலவின் புகையில்
பூனையொன்று
உயிர்த்தெழுகிறது.

## ADAM AND EVE'S CHILDREN

I arrange
a few words
and drive nails.
It becomes
a ladder.
Stepping on the ladder
and opening the window,
I peep out at the sky.
Some of us
are reading
political issues.
Some others,
taking it to be tea,
are sipping
empty cups.
One person alone,
while operating a computer,
is discussing about
the seventh sense

he has got
with someone
on his cell phone.
After playing for a while
on an imaginary swing,
I get off the ladder
thinking that we
are the children of
Adam and Eve.
Some raindrops
drench me.
Summoning a word,
I order it to turn
into an umbrella.
It became an umbrella.
The raindrops and I
are now drinking
hot tea.
The raindrops
outside the window,
And, me,
sitting on a chair
at home.

18:42 | 03.02.2018 | At Karuṟ Railway Station on board the Jan Shatabdi to Coimbatore

# ஆதாமின் குழந்தைகள்

சொற்கள் சிலவற்றை
அடுக்கி
ஆணி அடிக்கிறேன்
அது ஏணியாக உருவாகிறது.
ஏணியில் கால் வைத்து
சன்னல் திறந்து
வானத்தை எட்டிப் பார்க்கிறேன்.
எம்மவர் சிலர்
அரசியல்
பிரதியை வாசித்துக் கொண்டிருக்கிறார்கள,
இன்னும் சிலர்
தேநீர் என நினைத்து
வெற்றுக் குவளையை அருந்திக் கொண்டிருக்கிறார்கள்.
ஒரெயொருவன்
கணினியை இயக்கியபடி
கைபேசியில்
யாரோ ஒருவனிடம்
தனக்கு கிடைத்துள்ள

ஏழாம் அறிவு பற்றி பரிமாறிக் கொள்கிறான்.
கொஞ்ச நேரம்
ஊஞ்சல் கட்டி ஆடிவிட்டு
ஆதம் ஹவ்வாவின்
குழந்தைகள் நாமல்லவா
என நினைத்தவனாய்
ஏணியிலிருந்து இறங்குகிறேன்
சில மழைத்துளிகள்
என்னை நனைக்கின்றன.
சொல்லொன்றை அழைத்து
குடையாக உருவாகுமாறு
கட்டளையிட்டேன்
அது குடையானது.
மழைத் துளிகளும் நானும்
இப்போது
சூடாக தேநீர் அருந்திக் கொண்டிருக்கின்றோம்.
மழைத் துளிகள் சன்னலுக்கு வெளியே.
நான் வீட்டு இருக்கையில் அமர்ந்தபடி.

## WHOM DID YOU INVITE CICADA?

The cicada's call
in the language it knows
rebounds from
the nerves in my ears.
Since I am a male,
the cicada may have
invited his ladylike.
Since it was 5:30
early in the morning,
it may have been
to wake the Sun up
and ask the night
to go to sleep.
Or to satiate the pangs

of the needle sharp pains
of winter.
If not that too either,
It could have called me
for the morning prayers
or to write a poem.
To inquire why
the cicada called,
I get up from the room
and get closer to it.
Bringing along the leftover dew
and moving my words aside,
the cicada comes and sits inside
the poem.

Sri 15:30 | 02.02.2018 | Thanjavur

## யாரை அழைத்தாய் சில்வண்டே

அதற்கு தெரிந்த பாஷையில்
சில்வண்டு
யாரோ ஒருவரை அழைப்பது
என் காது நரம்புகளில்
மோதிச் செல்கிறது.
நான் ஆண் என்பதால்
சில்வண்டு
தன் காதலியை அழைத்திருக்கலாம்.
அதிகாலை 5.30 மணி
என்பதால்
சூரியனை எழுப்பி
இரவை தூங்கும்படி சொல்லியிருக்கலாம்.
அல்லது

பனியின் ஊசி குத்தும் வலியை
பசியாறியிருக்கலாம்.
அப்படியுமில்லையெனில்
உம்மாவை தொழுகைக்காகவும்
என்னை
கவிதையொன்று எழுதுவதற்காகவும்
கத்தியிருக்கலாம்.
எதற்கு அழைத்தாய் என
சில்வண்டை விசாரிப்பு செய்வதற்காக
அறையை விட்டும் எழுந்து
அதன் தூரத்தை நெருங்குகிறேன்
எஞ்சிய பனியையும்
அழைத்துக் கொண்டு
என் சொற்களை நகர்த்திவிட்டு கவிதைக்குள்
வந்தமர்கிறது சில்வண்டு.

## CITY OF FIREFLIES

Yesterday I happened
to go the city of fireflies.
Only to converse with fireflies
did I learn the language of insects.
For carrying the light
from those very heavy moments
in their bodies,
amidst insect clans
Fireflies occupy the second place
because honeybees
remain the top most in the insect species.
Still, there are no records
of their division on the basis of castes.
The city of fireflies

is very beautiful.
There were a lot of colourful scenes
fit to be shown
to children.
Stars borrowing light
from fireflies
could be seen there.
I got some light
for my children too.
That's now growing
into fireflies
in my entire room.

Sri 23:43 | 28.01.2018 | Chennai

## மின்மினிகளின் நகரம்

நேற்று மின்மினிகளின்
நகரத்திற்கு செல்லக்கிடைத்தது
மின்மினிகளிடம் பேச வேண்டும் என்பதற்காகவே
பூச்சிகளின் மொழியை கற்றிருந்தேன்
மிகவும் கனதியான நிமிடங்களது
உடலில் ஒளியை சுமந்திருப்பதால்
பூச்சி இனங்களில்
இரண்டாம் இடம் மின்மினிகளுக்குண்டு
ஏனெனில்
தேன் பூச்சிகளே
உலகின் அதியுயர் பூச்சி இனமாக இருக்கின்றன.

எனினும் அவை சாதி பிரித்ததாய்
எந்த குறிப்புக்களும் இல்லை
மின்மினிகளின் நகரம் மிக அழகானது
குழந்தைகளிடம் காண்பிக்க வேண்டிய காட்சிகள்
நிறையவே கலர் கலராய் கிடந்தன
நட்சத்திரங்கள் மின்மினிகளிடம்
ஒளியை கடனாய் வாங்கிச் செல்வதை
அங்கு காணக்கிடைத்தது
எனது குழந்தைகளுக்காகவும்
கொஞ்சம் ஒளி வாங்கி வந்தேன்
அவை என் அறை முழுக்க
மின்மினிகளாய் வளர்கின்றன.

# Colours

A bird has taken
the colours on me
and kept in a room where
I am not there
or hidden it
in a big forest.
Unable to start on
the coloured dreams I had seen,
I let them be as they are.
Like a doll devoid of those
hopeful hues,
several moments remain there.
With colours gone
I am black
like a crow.
Sometimes,

like a child
who hasn't yet learnt to speak
I even start to weep.
There's talk all over my room
that this must be
the third stage of ripening grief.
O......
Even if that bird had kept
my colours in space beyond the sky,
back one day in pairs to my city
those colours will fly.
Regaining lost forms,
as a human with colours,
even if very late,
my conversation
I shall begin.

Sri 11:18 | 28.01.2018 | Chennai

## நிறங்கள்

என் மீதான நிறங்களை
ஒரு பறவை எடுத்துச் சென்று
நான் அற்ற அறையில் வைத்திருக்கிறது
அல்லது பெருங் காடொன்றில்
மறைத்து வைத்திருக்கிறது
அதனால்
வர்ணங்களால் நான் கண்ட கனவுகளை
தொடங்க முடியாமல் அப்படியே வைத்திருக்கிறேன்
நம்பிக்கை தரக்கூடிய அந்நிறங்கள்
தவறிய பொம்மையென
பல பொழுதுகள் அங்கேயே இருக்கின்றன
நிறங்களற்றதால்
நான் காகத்தைப் போல
கறுப்பாக இருக்கிறேன்

சில நேரம் மொழி தெரியாத
சிறு குழந்தையைப் போல
அழவும் முற்படுகிறேன்
துயர் முற்றியதன்
மூன்றாம் நிலையாக இருக்கக்கூடுமென
எனதறை முழுக்க பேச்சு
ஓ......
பறவையே வானத்திற்கு
அப்பாலான வெளியில்
என் நிறங்களை வைத்திருந்தாலும்
சோடி சோடியாய்
என் நகரத்திற்கு அந்நிறங்கள்
ஒரு நாள் பறந்து வரும்
பிரிந்த உருவங்கள் கிடைத்து
நான் மறுபடியும் நிறங்களுடைய
மனிதனாய் மிகத்தாமதமாயினும்
என் உரையாடலை தொடங்குவேன்.

## LIKE A STATUE

On a full moon day,
tunnelling through mountains,
I discover
ancient statues.
At my touch,
the statues
turn into birds
and start leaving.
Since it may be a struggle
in this universe's space,
I order the birds
to remain as statues only.
The birds say that
it is impossible in the present
and, propelled by worldly desires,
start for the great forest.
Before they leave,

I instruct
that one day
after their desires are quenched
they should return.
"Just as you were changed
from statues into birds,
from birds into angels
I shall transform you.
Are there any
who don't like angels?"
I say.
Accepting my instructions
the birds left for the forest..
Realising their dreams
upon experiencing forest life,
the birds liked the universe's space.
Having liked the universe's space,
the birds forgot
the instructions.
Waiting for them,
I now looked like
a statue.

Sri 19:22 | 27.01.2018 | Chennai

## சிற்பங்களின் சாயல்

ஒரு பௌர்ணமி நாளில்
மலைகளைக் குடைந்து
ஆதியின் சிற்பங்களை கண்டடைகிறேன்
எனது கைகள் பட்டதும்
சிற்பங்கள்
பறவைகளாகிப் புறப்படுகின்றன
பிரபஞ்ச வெளியில்
போராட வேண்டியிருக்கும்
எனவே நீங்கள் சிற்பங்களாகவே
இருந்து விடுங்கள் என
பறவைகளிடம் கட்டளையிடுகிறேன்.
நிகழ் காலத்தில்
சாத்தியமற்ற ஒன்றெனெ சொல்லி
பறவைகள்
பிரபஞ்ச ஆசைகளின் திரட்சியில்
நெடுவனம் நோக்கிப் புறப்படுகின்றன
பறவைகள் புறப்படுவதற்கு முன்
ஒரேயொரு கட்டளையிடுகிறேன்

அவா அடங்கிய ஒரு நாள்
மீண்டும் வரவேண்டும்
சிற்பங்களாய் இருந்த உங்களை
பறவைகளாய் உருவாக்கம் செய்தது போல்
பறவைகளாய் இருக்கும் உங்களை
தேவதைகளாய் உருவாக்கம் செய்வேன்
தேவதைகளைப் பிடிக்காதவர்களும்
உண்டா என சொல்லி வைக்கிறேன்
கட்டளையை ஏற்ற பறவைகள்
வனம் நோக்கிப் புறப்பட்டன
வனம் நுகர்ந்ததில்
கனவுகள் முகிழ்ந்து
பறவைகளுக்கு
பிரபஞ்ச வெளி பிடித்துப்போனது
பிரபஞ்ச வெளி பிடித்துப்போனதில்
பறவைகள் கட்டளைகளை மறந்தன
காத்திருந்ததில்
நான் இப்போது
சிற்பங்களின் சாயல் கொண்டிருந்தேன்.

# I AM NOT THE KILLER

Dreams thrown
out of the window
Trespass once again
into my bedroom
like the smile
of a child.
Even that solitude
would believe
when told that it was
a very irritating night.
The dreams I nurtured

make me burn
in the toxic ambience
of a lighted candle.
Because of its treachery,
I have come to the decision
of not sleeping or interacting
with dreams.
A blood-coloured dream
is lying dead.
I am not the killer.

Sri 11:14 | 25.01.2018 | Chennai

# கொலையாளி நான் அல்ல

சன்னலுக்கு வெளியே
எறிந்த கனவுகள்
மீளவும்
ஒரு குழந்தையின் புன்னகை போல
என் படுக்கையறைக்குள் அத்து மீறி
நுழைகின்றன.
எரிச்சல் மிகுந்த இரவு இதுவென்று சொன்னால்
அந்த தனிமையும் நம்பும்.
நான் தூக்கி வளர்த்த கனவுகள்
விஷச் சூழலை

மெழுகுபத்தியில் ஏற்றி
என்னை அதில் எரிய விடுகின்றன.
இதன்
துரோகம் கனவுகளோடு உறங்குவதோ
அல்லது
உறவு வைத்துக் கொள்வதோ இல்லை
என்கிற முடிவிற்கு
நான் வந்திருக்கிறேன்.
ரத்த நிறத்தில்
கனவொன்று செத்துக் கிடக்கிறது
கொலையாளி நான் அல்ல.

## IF A SCENE HAD HAPPENED

A song played by rain
has occupied the whole room
You readers may wonder
A water tank could have
been erected there
Fishes could pounce
and sleep on the cot
A frog may jump
and seek asylum
in my words
Then
a regifoam may

carry my poetry
like ants
Along the edges of my moustache
the two banks of a river
may appear
My solitude lying prone
could be ended
by Mehroon's memories
If a scene had happened like this,
a poem may cross
a few cities

Sri 22:37 | 24.01.2018 | Chennai

## காட்சி நடந்திருந்தால்

மழை இசைக்கும் பாடல்
அறை முழுவதுமாய் புகுந்துவிட்டது
வாசிப்பாளர்களாகிய நீங்கள் யோசிக்கலாம்
அங்கு குளம் ஒன்று உருவாக்கியிருக்கலாம்
மீன்கள் பாய்ந்து கட்டிலில் தூங்கலாம்
தவளை ஒன்று குதித்து
என் சொற்களுக்குள் தஞ்சமடையலாம்
பின்
ரெஜிபோம் ஒன்று

என் கவிதைகளை எறும்புகளை போல்
சுமந்து செல்லலாம்
என் மீசை நுனியில்
நதியின் இரு கரைகள் தோன்றலாம்
நீளமாய் கிடந்த என் தனிமையை
மெஹருனின் நினைவுகள் முடித்து வைக்கலாம்.
இப்படி காட்சி நடந்திருந்தால்
ஒரு கவிதை சில நகரங்களை
கடந்து செல்லலாம்.

## WHO IS HE?

I'm writing an introductory note.
It's not clear who he is.
Even during daytime yesterday,
he came in a dim-lit dream.
For the last few days,
he comes to my street.
When no one is present,
he splashes colours
all over my room.
Then, he creates lines
and steals all my imagination.
The roots of the light

from the candle
have photographed
the moment he moved.
Let's identify.
The one crashing
into the mirror
and splintering
could be me.
My dream
thus propped up
may slide
anytime.

Sri 19:34 | 22.01.2018 | Chennai

## அவன் யார்

அறிமுகக் குறிப்பொன்றை எழுதிக்
கொண்டிருக்கிறேன்
அவன் யாரென்று தெரியவில்லை.
நேற்றுப் பகலும்
போதிய வெளிச்சம் இல்லாத
கனவுக்குள் வந்து போனான்.
சில நாட்களாய்
எனது தெருவுக்கு வந்து போகிறான்.
யாரும் இல்லாத நேரங்களில்
எனது அறை முழுக்க
நிறங்களை தீட்டிவிடுகிறான்,

பின் வெள்ளைத் தாள்களில்
வரிகளை உருவாக்கி
என் கற்பனைகளையெல்லாம் திருடிவிடுகிறான்.
மெழுகுவர்த்தியிலிருந்து வரும்
ஒளியின் வேர்கள்
அவன் நகரும் நேரத்தை படம் பிடித்து
வைத்திருக்கின்றன.
அடையாளம் காண்போம்
கண்ணாடியில் மோதித் தெறிப்பவன்
நானாகக் கூட இருக்கலாம்.
இப்படி முட்டுக் கொடுத்திருக்கும்
எனது கனவு
எந்த நேரமும் சரியலாம்

## Butterfly with Fire

It was solitude
It was a forest
There was a butterfly
I allowed my dreams
to befriend the butterfly
The friendship enlarged
beyond legends,
snowforests and cloud covered mountains
and flew all over the universe
on a body of air
Wow!
Frogs flew
like birds do
Fireflies galloped
like horses
One day
the butterfly

started to fly
with fire
It was time for
the dream to return
to the nest
Even after coming back home
gathering the history
after friendship died
but leaving the myth of friendship behind
I have asked for the dream's copy in mind
that the butterfly
would be hunted down
by wild animals
or eagles with cruel talons
be discarded
and dissolved like ashes
in a sea.

Sri 20:50 | 21.01.2018 | Chennai

## தீ கொண்டு பறக்கும் காட்டுப் பட்டாம் பூச்சி

அது ஒரு தனிமை
அது ஒரு காடு
அங்கு ஒரு பட்டாம் பூச்சி
பட்டாம்பூச்சியுடன் எனது கனவுகளை
பழகவிட்டேன்
நட்பு விசாலமானதொன்றாய்
புனைவுகளைக் கடந்து பனிக்காடு,
மேகங்கள் முட்டும் மலைகளென பிரபஞ்சமெங்கும்
காற்றுடல் சுமந்து பறந்தன
ஆஹா
தவளைகள் பறவையைப் போல் பறந்தன
மின்மினிகள் குதிரையின் சாயல் கொண்டு ஓடின

ஒரு நாள்
பட்டாம்பூச்சி தீ கொண்டு
பறக்கத் துவங்கியது
கூடு திரும்புதல் கனவுக்கு அவசியமாயிற்று
நட்பின் மரணதிற்குப் பின்னரான
வரலாறை
கனவு சேகரித்துக் கொண்டு
நட்பின் தொன்மத்தை அங்கேயே விட்டுவிட்டு
ஒரு மஹா ரணத்தில் ஏறி
கூடு வந்து சேர்ந்துவிட்ட பின்னும்
பட்டாம்பூச்சியை
காட்டு மிருகங்களோ
கோர நகம் கொண்ட கழுகுகளோ
வேட்டையாடிவிடும் என்ற
கனவின் மனப்பிரதியை கழற்றி கடலொன்றில்
அஸ்தியைப் போல் கரைக்க சொல்லியிருக்கிறேன்.

# READER

While searching for some words,
finally I happened to meet
words arranged by someone
in the library.
Taking those words then,
I entered my favourite park.
They like the reader,
the words said.
I like words,
I said.
Where were you
all this time,
the words asked.
Searching for you only,
I said.
Our creator is dead,
the words said.

You haven't died
said I.
Swearing on the
night and the day,
they have been
in the dark
for a few decades,
said words.
Swearing on the nights and days
you were alone,
you will be in vogue
as the reader's copy
for all the time to come,
I said.
Don't lie in the name of the Devil,
said the flowers.

Sri 21:12 | 17.01.2018 | Chennai

# வாசகன்

சில சொற்களை தேடியலைந்து
இறுதியாய்
யாரோ நூலகத்தில் அடுக்கி வைத்திருந்த
சொற்களை சந்திக்க கிடைத்தது
பின் அச்சொற்களை அழைத்துக் கொண்டு
எனக்கு விருப்பமான பூங்காவுக்குள் நுழைந்தேன்
எனக்கு வாசகனை பிடிக்குமென்றன சொற்கள்
எனக்கு சொற்களைப் பிடிக்குமென்றேன்
இவ்வளவு காலமாய் எங்கிருந்தாய்
என சொற்கள் கேட்டன
இவ்வளவு காலமாய் உங்களைத்தான்
தேடியலைந்தேன் என்றேன்

எங்களை படைத்தவன் மரணித்துவிட்டான்
என்றன சொற்கள்
நீங்கள் மரணிக்கவில்லை என்றேன்
இரவின் மீதும் பகலின் மீதும் சத்தியமாக
சில தசாப்தங்களாக இருளில் இருக்கிறோம்
என்றன சொற்கள்
நீங்கள் தனித்திருந்த
இரவின் மீதும் பகலின் மீதும் சத்தியமாக
மீதமிருக்கும் காலமெல்லாம்
வாசகனின் பிரதியாய்
புழக்கத்திலிருப்பீர்கள் என்றேன்
சாத்தானின் பெயரால் பொய் சொல்லாதே
என்றன சொற்கள்.

## STRONG STRUGGLE

The wind bursts unusually
to start playing
my motionless
solitude
and my silence.
My roaring ocean,
my body that had dreams
have all fallen on this earth
odourless
and lifeless.
I have begun
a strong struggle.
The lineage of
the sorrow of
a treachery
called childhood
that had fallen

deep into the shadows
of direct incidents
is incomprehensible.
I learnt it only later
the background fashion
of my having lived
as a person who did not know
how to measure
the ancestry of love.
From the drop of venom
of the snake
that entered the room
yesterday,
I start watching
the tale
of a wine goblet
of great love
foaming all over
sprouting solitude.

Sri 19:17 | 13.01.2018 | Somewhere in the skies over Bhopal

## வலிமையான போராட்டம்

அலாதியாய் வெடிக்கும் காற்று
அசைவற்ற
என் தனிமையையும்
என் மௌனத்தையும்
இசைக்கத் தொடங்குகிறது.
ஆர்ப்பரித்த
என் ஆழி
கனா தந்த என் யாக்கை
எல்லாம் வாசனையற்றும்
உயிரற்றும்
இவ்வுலகில் வீழ்ந்து கிடக்கின்றன
வலிமையான போராட்டம்
தொடங்கியிருக்கிறேன்.
நேரிடையான சம்பவங்களின்
நிழல்களுக்குள்

ஆழமாய் வீழ்த்தப்பட்ட
பால்யம் என்கிற
துரோகத்தின் துன்பியம்
நிலமெங்கும் வழியத்தொடங்கியதன்
கோத்திரம் புரியவில்லை
அன்பின் மூதாதையத்தை
அளவீடு செய்யத் தெரியாத
நபராகவே நான் வாழ்ந்திருக்கிறேன்
என்கிற பின்னணி நாகரிகத்தை
பின்னரே அறிந்தேன்.
உயர்ந்த அன்பின்
மதுக் கோப்பை எங்கும்
நுரை தள்ளியபடி
தனிமை முளைத்து நின்ற கதை
நேற்று அறைக்குள் புகுந்த
சர்ப்பமொன்றின் விஷத்துளியிலிருந்து
நான் கவனிக்கத் தொடங்குகிறேன்.

## ENTRY INTO A DREAM

I woke up
right in the middle of a dream.
A little girl
stands alone in a forest.
I saw her father
being chased by an elephant.
The two had come there
to spend the little girl's vacation.
Finally, the lion and the zebra
started to enter the dream.
By now, the lion
could have got closer
to the little girl

or the little girl could have
rode the zebra
to drive off the elephant
that chased her father
and the two could have also
got out of the forest
and reached home.
To know the scene
on the last page of this incident,
I, we
have to enter
the rest of the dream.

Sri 19:34 | 13.01.2018 | Somewhere in the skies over Nagpur

## கனவுக்குள் நுழைதல்

கனவின் மத்திய பகுதியில் விழித்துவிட்டேன்
காட்டுக்குள் தனியாக நிற்கிறாள் சிறுமி
அவளது வாப்பாவை
யானை துரத்தக் கண்டேன்
அவர்கள் இருவரும் சிறுமியின்
விடுமுறையைக் கழிக்கவே
அங்கு வந்திருந்தார்கள்
இறுதியாக சிங்கமும் வரிக் குதிரையும்
கனவுக்குள் நுழைய ஆரம்பித்தன
இந்த நேரம்

அங்கு சிறுமியை சிங்கம் நெருங்கியிருக்கலாம்
அல்லது சிறுமி வரிக் குதிரையில் ஏறி
தன் வாப்பாவை துரத்திச் செல்லும்
யானையை விரட்டி
இருவரும் காட்டை விட்டும் வெளியேறி
வீடு வந்து சேர்ந்திருக்கலாம்
இந்நிகழ்வின் கடைசி பக்க காட்சியை
தெரிந்து கொள்ள வேண்டுமெனில்
நான் நாம்
மீதிக் கனவுக்குள் நுழைய வேண்டியிருக்கிறது

## LIKE AN AIR BUBBLE

Further,
I know that dream
for forty years.
Its face,
its colour,
are on the walls of my room
still with
the same old type
of individual forms.
Additionally, about its nature
and lineage,
it has to be said:
The eyes are green,

capable of turning blue
at times;
the skins are soft
like clouds;
the body
has an ocean like limit.
From the beginning,
that dream has been living
at the centre point
of the sky and the earth
like an air bubble.

Sri 19:52 | 13.01.2018 | Somewhere in the skies over Hyderabad

## காற்றுக் குமிழியாகவே

மேலும் அந்தக் கனவை
நாற்பது வருடங்களாக எனக்குத் தெரியும்
அதன் முகம்
அதன் நிறம்
எனதறையின் சுவரெங்கும்
இன்னும் பழைய மாதிரியே
பிரத்தியேகமான வடிவங்களோடு இருக்கின்றன
மேலும் அதன் தன்மை குறித்தும்
அதன் பரம்பரை குறித்தும்
இவ்வாறு சொல்ல வேண்டியிருக்கிறது

கண்கள் பச்சை நிறமுடையன
சில நேரங்களில் மட்டும்
நீல நிறமாக மாறக் கூடியன
தோல்கள் மேகத்தைப் போல
மென்மை
உடல் கடலைப் போல்
எல்லையுடையது
அந்தக் கனவு
ஆதியிலிருந்து வானத்தின் மற்றும்
பூமியின் மையப்புள்ளியில்
காற்றுக் குமிழியாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறது.

## Solitude

Yesterday too solitude had to be drawn.
I drew solitude as a night.
Some stars came and sat for the night.
A few birds also reached.
The Moon Princess
kept hiding inside clouds
and appearing anew.
There was company to talk to.
It felt like an era had passed through.
Solitude is akin to the black hue.
It had laden on me

the darkness of a vast jungle.
Darkness is a kind of ache too.
It has to be hidden
under pillows.
However much hidden,
It permeates all over the room.
Now, the third watch of three hours is past.
I start drawing solitude as a day.
A day in which some people may
move about.

Sri 17:56 | 08.01.2018 | Noida

## தனிமை

நேற்றும் தனிமையை வரைய வேண்டியிருந்து
தனிமையை ஒரு இரவாக வரைந்தேன்
இரவிற்கு
சில நட்சத்திரங்கள் வந்தமர்ந்தன
இன்னும் சில பறவைகளும்
வந்துசேர்ந்தன
நிலா ராஜகுமாரி மேகத்திற்குள்
மறைந்து மறைந்து
புதிது புதிதாய் காட்சி தந்தாள்
பேச்சுக்கு துணை கிடைத்தது
ஒரு யுகத்தைக் கடந்தது போல் இருந்தது
தனிமை கறுப்பு நிறத்தையொத்தது
அது ஒரு பெரும் வனத்தின்

இருளை என் மீது சுமத்தியிருக்கிறது
இருள் என்பதும்
ஒரு வகை வலிதான்
அதனைத்தான்
பல நேரங்களில் தலையணைக்கடியில்
மறைத்து வைக்க வேண்டியிருக்கிறது
எப்படி மறைத்து வைத்த போதும்
அறை முழுக்க அது பரவிடுகிறது
இப்போது
மூன்றாம் சாமம் தாண்டியிருந்தது
தனிமையை ஒரு பகலாக வரையத் தொடங்குகிறேன்
பகலுக்குள் சில மனிதர்கள் நடமாடலாம்.

# Memory

A meeting happened
with a memory abandoned
by everyone.
On its face
in lieu of eyes
were two stars.
Instead of its arms
were two rainbows.
It wore distress
for a dress.
It started to speak
very slowly
and shared
its story.
For everyone,
over eons of time,
it had wandered

in autographs,
walls of halls
and grey hairs,
it said.
Then it was transformed
into old dolls
and thrown away
on the road
and, even now,
only after giving birth to a memory
was it meeting me,
it added,
and handed over
the memory given birth to by a memory.
In that memory,
I was being born.

Sri 11:48 | 08.01.2018 | Noida

## நினைவு

எல்லோராலாலும் கைவிடப்பட்ட
நினைவொன்றை சந்திக்க கிடைத்தது
அதன் முகத்தில்
கண்களுக்கு பதிலாக
இரண்டு நட்சத்திரங்கள் இருந்தன
அதன் கைகளுக்குப் பதிலாக
இரண்டு வானவில்கள் இருந்தன
அவநம்பிக்கைகளை ஆடைகளாக அணிந்திருந்தது
அது பேசத் தொடங்கி
வெகுநிதானமாகவே தன் கதையை
பகிரலானது
எல்லோருக்காவும்
காலம் காலமாக

ஆட்டோகிராஃபுகளிலும்
அறைச்சுவர்களிலும்
நரைத்த மயிர்களிலும் அலைவுற்றதாக சொன்னது
பின் பழைய பொம்மைகளை போல்
தெருவில் உருமாறி வீசி ஏறியப்பட்டதாகவும்
இப்போதும் தான் ஒரு நினைவை
பெற்றெடுத்துக் கொண்டு
என்னைச் சந்திப்பதாகவும் சொன்ன
நினைவு பெற்றெடுத்த நினைவை
என் கையில் ஒப்படைத்தது
அந்த நினைவுக்குள்
நான் பிறந்து கொண்டிருந்தேன்.

## JOURNEY

To travel through
this path to
reach me,
you have to
climb on to the wind.
You
have two
options to
mount the wind.
One is a ladder
and the other,
wings,
to continue
the journey.
Within the given minutes,
the path must be traversed.
The right option

must be chosen.
Else,
the ladder and the wings
shall vanish.
To think it over a bit,
some free time is given.
Everybody
covers the path easily.
I am all exclamation marks.
"How did it become possible",
I asked a person.
He laughed
and said
"We too took
the same flight of imagination
that you took
to journey through the path.

Sri 21:50 | 07.01.2018 | Noida

## பயணம்

இந்த பாதையை நீங்கள்
கடந்து என்னிடம் வருவதெனில்
காற்றில் ஏறவேண்டும்
காற்றில் ஏறுவதற்கு
உங்களுக்கு இரண்டு தெரிவுகள் உண்டு
ஒன்று ஏணி தரப்படும்
மற்றொன்று சிறகுகள் தரப்படும்
பயணத்தைத் தொடரலாம்
வழங்கப்பட்ட நிமிடங்களுக்குள்
பாதையைக் கடக்க வேண்டும்
சரியான தெரிவு முறை அவசியம்
இல்லையெனில்
ஏணியும் சிறகுகளும் மறைந்துவிடும்

சிறிதளவு யோசிக்க
இலவச நேரம் தரப்படுகிறது
எல்லோரும்
மிக எளிதாகவே
பாதைக் கடந்து வருகிறார்கள்.
எனக்கு ஒரே ஆச்சரியக் குறி
இது எப்படி சாத்தியமாச்சி
ஒருவனை பிடித்துக் கேட்டேன்
அவன் சிரித்துவிட்டுச் சொன்னான்
நீங்கள் ஏறிய கற்பனையில்தான்
நாங்களும் ஏறி
பாதையைக் கடந்து வந்தோம்.

## From an Old Book

It must have washed up on the shore
from the river
that dead body.
Someone had
arranged death
for him.
The dead man is
walking from the shore
towards me.
It may take
three more minutes
for him to reach me.
Two minutes
are over.

He nears me.
Where did they come from
these cavalry men!
They take him away from there.
There is a palace at that place.
The guards open
the palace gates.
How could this be possible!
Soldiers and citizens
welcome him with garlands.
A woman offers him wine
or his favourite beer to drink.
Another one
brings apples.

Surprise!
A cat comes there
and asks him
"Who are you?"
Amidst all that
one said
"Have you forgotten Hon'ble Minister
that he is the lazy King
of our Empire"
and added
"Because he was always sleepy
we sent him to bathe in the sea.
But he slept
there too".
That's how
the story read
from an old book
ended.

Sri 15:35 | 06.01.2018 | Noida

## பழைய புத்தகம் ஒன்றிலிருந்து

ஆற்றிலிருந்து கரைக்கு வந்திருக்க வேண்டும்
அந்த உடல்
யாரோ அவனுக்கு
மரணத்தை தயாரித்திருக்கிறார்கள்
இறந்தவன் கரையை விட்டும்
என்னை நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கிறான்
இன்னும் மூன்று நிமிடங்களாகலாம்
என்னிடம் அவன் வந்து சேருவதற்கு
இரண்டு நிமிடங்கள் முடிந்துவிட்டது
அவன் என்னை நெருங்குகிறான்

எங்கிருந்து வந்தார்கள்
இந்த குதிரை வீரர்கள்
அவனை அங்கிருந்து அழைத்துச் செல்லுகிறார்கள்
அங்கு ஒரு அரண்மனை இருக்கிறது
காவலாளிகள் அரண்மனையின்
கதவை திறக்கிறார்கள்
எப்படி இது சாத்தியம்
படைவீரர்கள் மக்களென அவனை
மாலை சூடி வரவேற்கின்றார்கள்
மது அல்லது அவனுக்கு பிடித்த
பியரை பருக ஒருத்தி கொடுக்கிறாள்
ஆப்பிள்களை இன்னொருத்தி
கொண்டு வந்து கொடுக்கிறாள்

ஆச்சரியம் பூனை ஒன்று அங்கு வந்து
அவனை "நீ யார்"எனக் கேட்கிறது
அதில் ஒருத்தன்
"மந்திரியாரே மறந்துவிட்டீரோ
இவர் நம் சாம்ராஜ்ஜியத்தின்
சோம்பேறி அரசரல்லவா"
என கூறியவன்
"அரசர் எப்போதும் தூங்குகிறார் என்றல்லவா
அவரை கடல் குளிக்க அனுப்பினோம்
அவர் அங்குமல்லவா தூங்கிவிட்டார்" என்றான்
பழைய புத்தகம் ஒன்றிலிருந்து
வாசித்த கதை இப்படிதான் முடிந்தது.

# Event

Because it's a mystery novel
I am reading
with great care
Unexpectdly
a mountain
may collapse
The night
may break quickly
and be lost
Angels may come out
of mirrors
The words I read
may elongate
like rabbit ears
Tension prevails
Since it is the rainy season
a frog leaps into my imagination
and draws this event to a close.

Sri 22:30 | 01.01.2018 | Noida

## சம்பவம்

மர்மங்களை முன் வைக்கும்
நாவல் என்பதால்
மிக கவனமாக வாசித்துக் கொண்டிருக்கிறேன்
எதிர்ப்புணவாய்
எந்த நேரமும்
மலையொன்று சரியலாம்
இரவு சடுதியாய் உடைந்து காணாமல் போகலாம்
நிலைக் கண்ணாடியிலிருந்து
தேவதைகள் வெளிவரலாம்
நான் வாசிக்கும் சொற்கள்
முயலின் காதுகளாய் நீளலாம்
படபடப்புக் குறையவில்லை
மழை நாட்கள் என்பதால்
தவளையொன்று கற்பனைக்குள்
பாய்ந்து
இச்சம்பவத்தை நிறைவுக்கு கொண்டு வருகிறது.

## In Smoke Form

Sipping hot tea
two cups
begin to converse
As to start
on what
they spoke about
two smoke spirals
rise up over the chairs
wriggling like snakes
that then spread
and sway
like a lovely tree
There is no opportunity
for mosquitoes
to hover around

or taste
Two tanks
could be seen there
Since the thick skins
of the cups
were fitted with glass rings
they don't die
with bodies burning
Now the tea shakes
in the air blown
by someone
Henceforth it can be drunk
by two ordinary people

Sri 20:15 | 30.12.2017 | Chennai

## புகை வடிவமான

சூடாக தேநீர் அருந்திக் கொண்ட
குவளைகள் இரண்டு பேசத் தொடங்கின
அவை என்ன பேசியிருக்கும் என்பதை
துவங்கும் போது
புகை வடிவமான
சுருள்கள் இரண்டு மேலெழும்பி
இருக்கைக்கு மேல் பாம்பாய் நெளிகின்றன
பின் அழகான மரமொன்றாய்
அசைந்து கிளைகள் பரப்புகின்றன
அங்கு கொசுக்கள்மொய்த்து சுவைக்க
வாய்ப்புகள் இருக்கவில்லை

அங்கு இரண்டு குளங்களை பார்க்க முடிந்தது
குவளையின் பெருந்தோல்கள்
கண்ணாடி வளையங்களால்
பொருத்தப்பட்டிருப்பதால்
எரியும் உடல் கொண்டு
இறந்து போவதில்லை
எனினும் அவைநோயுற்றிருக்கின்றன
இப்போது யாரோ
ஊதிவிட்ட காற்றில் தேநீர் அசைகிறது
இனி எளிய மனிதர்கள்
இருவர் பருகலாம்.

# Awakening

Sleep remains undisturbed
because of journeying
an agonising path
strewn with glass splinters
amidst pieces of the word
that fell and broke
the night before
For the ache
to leave me
and go faraway
from the universe as well
send a black stallion
It's necessary to transform
that horse into another night
and banish from
memories too

Sri 21:33 | 29.12.2017 | Chennai

## தூக்கம் கலை

தூக்கம் கலையாமல் இருக்கிறது
இரவிற்கு முன்
தவறி உடைந்த வார்தைத் துண்டின்
நடுவில் கண்ணாடித் துண்டுகள் சிதறி
பெரும் வலியொன்றின்
பாதையில் சென்றுகொண்டிருப்பதால்.
என்னிலிருந்து
அவ்வலி இடம் பெயர்ந்து
பிரபஞ்சத்தை விட்டும் மிக தூரம் சென்றடைய
கறுப்பு குதிரை ஒன்றை
அனுப்பிவை
அக் குதிரையை மற்றுமொரு இரவாக மாற்றி
நினைவுகளை விட்டும் துரத்தியடிக்க
வேண்டியிருக்கிறது.

## Some call him a seer

Keeping truths
at the back
of his room
he left
with whatever
legendary copies
accessible
He looked at a valley
and called it a mountain
He saw a bird
and called it an aeroplane
A firefly
he called as the Sun
Scattered words
gathered in a heap

met to congratulate him
Felicitation
grew like a mountain
Unable to descend
from the mountain
He learnt to live
at the summit
Some call him
a seer
Some others aver
that when he starts to pray
the devils go away

Sri 17:51 | 28.12.2017 | Chennai

## சித்தர் என்றார்கள்

நிஜங்களை
அவனது அறையின் பின்புறத்தில்
வைத்துவிட்டு
கையில் கிடைத்த
புனைவாகிவிட்ட பிரதிகளுடன்
வெளியேறினான்
பள்ளத்தாக்கொன்றை பார்த்து
மலை என்றான்
பறவையொன்றைப் பார்த்து
விமானம் என்றான்
மின்மினியொன்றை
சூரியன் என்றான்

சிதறிக் கிடந்த
சொற்கள் திரண்டு குவியலாய்
அவனை சந்தித்துப் பாராட்டின
பாராட்டு மலையாய் வளர்ந்தது
மலையிலிருந்து
அவனால் கீழிறங்க முடியவில்லை
மலை உச்சியில்
வாழப் பழகிக் கொண்டான்
அவனை சிலர்
சித்தர் என்கிறார்கள்
மற்றும் சிலர்
அவன் ஜெபத்தைத் தொடங்கினால்
சைத்தான்கள் வெளியேறுவதாகச் சொல்கிறார்கள்.

# INSTEAD OF THE SPARROW

A sparrow
that had forgotten its nest
on my teacup came to rest
Tinges of sorrow
on the edges of its eyebrows
changed the colour of the teacup
Tea's thirst
now had to sip the sparrow
For a moment
I
look at the lonely sky
'Tweet! Tweet! Tweet!' resounds
Accepting the call of the times
I send off the pair in love
and instead of the sparrow
I sip on its love.

Sri 17:08 | 26.12.2017 | Chennai

# சிட்டுக் குருவிக்கு பதிலாக

வசிப்பிடத்தை மறந்த
சிட்டுக் குருவியொன்று
என் தேநீர் குவளையில்
வந்தமர்ந்தது
அதன் இமைகளின்
ஓரங்களில்
துயரின் கிளையசைந்து
வர்ணங்களால்
தேநீர் குவளை நிறம் மாறியது
தேநீரின் தாகம்
இப்போது சிட்டுக் குருவியை
பருக வேண்டியிருந்தது
ஒரு கணம்
ஏகாந்தமாய்த் தெரியும்
வானத்தைப் பார்க்கிறேன்
கீச்..கீச்..கீச்..என்ற சப்தம்
காலத்தின் அறிவிப்பை ஏற்று
காதல் ஜோடிகளை அனுப்பி வைத்துவிட்டு
சிட்டுக் குருவிக்குப் பதிலாக
அதன் காதலை பருகுகிறேன்.

## SEPARATING THE CITY

My city
should be
separated from the lands of the ancestry
said he
who had been transformed
beyond your guess.
He
is neither a toy
moving from
one place to another
in my room
nor the wintery cold
that came through the window

or a legend - filled poem of mine
For him to say
my city should be separated from the ancestoral lands
he had more than
one copy.
He placed a copy
in front of me.
A copy
that I could open and see.
From the copy
heaps and heaps
of naked people
began to emerge.

Sri 15:53 | 25.12.2017 | Noida

## நகரத்தைப் பிரித்தல்

எனது நகரத்தை
மூதாதையர்களின் நிலத்திலிருந்து
பிரித்துவிட வேண்டுமென்று,
உருமாற்றமடைந்த
உங்களால் ஊகிக்க முடியாத
அவன் சொன்னான்.
அவன்
என் அறையில் ஆங்காங்கே
இடம் மாறும் பொம்மையுமல்ல
சன்னல் ஊடாக நுழைந்த
மாரிகால குளிருமல்ல
புனைவுகளோடு வந்து நிற்கும்
என் கவிதையுமல்ல.

முதாதையர்களின் நிலத்திலிருந்து
எனது நகரத்தைப் பிரித்துவிடவேண்டுமென்று
அவன் சொல்வதற்கு
ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிகள்
அவன் வசமிருந்தன.
ஒரு பிரதியை
அவன் என்னிடம் முன் வைத்தான்
அப்பிரதியை
என்னால் திறந்து பார்க்க முடிந்தது
பிரதிக்குளிருந்து
குவியல் குவியலாக
நிர்வாண மனிதர்கள்
வெளிவரத் தொடங்கினார்கள்.

## THREE COPIES

I have divided the night
into three copies
In that
I have given
a high degree of difference
to each copy
In the first copy
you may
have a cup of tea
with Ilayaraja's melody
and discover
that the world is flat
In the second copy
you can sip

on an angel - kissed cup
and discover
that the world is elongated
In the third copy
living in a window-room
that's neither earth nor space
you may discover
that the world is round.
Say now.
In which copy
would you like to be?
The price of each copy
is a piece of dream

Sri 16:30 | 23.12.2017 | Noida

## மூன்று பிரதிகள்

இரவை மூன்று பிரதிகளாக
பிரித்து வைத்திருக்கின்றேன்
அதில்
ஒவ்வொரு பிரதிக்கும்
ஒரு உயர்ந்த வேறுபாட்டைக் கொடுத்திருக்கின்றேன்
முதல் பிரதியில்
நீங்கள் இளையராஜாவின் மெலோடியுடன்
தேநீர் அருந்திக் கொண்டே
பூமி தட்டையென
கண்டு பிடிக்க முடியும்
இரண்டாம் பிரதியில்
ஒரு தேவதையின்
முத்தக் குவளையை பருகியபடி

பூமி நீள்
வடிவமென
கண்டு பிடிக்க முடியும்
மூன்றாம் பிரதியில்
நிலமுமற்ற வெளியுமற்ற
சன்னல் அறையில்
வசித்துக் கொண்டே
பூமி உருண்டை என
கண்டு பிடிக்க முடியும்.
இப்போது சொல்லுங்கள்
எந்தப் பிரதியில் வசிக்க விரும்புகின்றீர்கள்
ஒரு பிரதியின் விலை
ஒரு கனவு துண்டு.

## INTOXICATION

A little girl
catches a serpent
as if a butterfly
Without wings fly
some roadside birds
A bus stops on the street
to urinate
The road changes
into two
Passengers jostle
like buffaloes
Human stink

pervades all over
the universe
The tree in the middle of the road
beckons with lust
The wonder of varied sights
Must be pitch drunk
The telltale smoke of marijuana
has changed me into
a resident between
hell and heaven

Sri 14:59 | 23.12.2017 | Noida

## போதை

சர்ப்பமொன்றை பட்டாம் பூச்சியென
பிடிக்கிறாள் சிறுமி
ரெக்கைகள் இல்லாமல்
பறக்கின்றன சில சாலையோர பறவைகள்
பேருந்து ஒன்று தெருவில் நின்று
சிறுநீர் கழிக்கிறது
சாலை இரண்டாக மாறுகிறது
பயணிகள் எருமை மாடுகளைப் போல்
முட்டி மோதுகிறார்கள்

மனித நாற்றம்
பிரபஞ்சமெங்கும் வீசத் தொடங்குகிறது
காமத்தோடு அழைக்கிறது
சாலை நடுவில் நிற்கும் மரம்
வெவ்வேறான காட்சிகளின் மாயம்
போதை தலைக்கேறியிருக்க வேண்டும்
கஞ்சா புகையின் கதையாடல்
சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும்
இடைநடுவில் வசிப்போனைப் போல்
என்னை மாற்றியிருக்கிறது.

## OF THE TWO

Suddenly two birds
woke me up from sleep
The window was open
Through that
I crossed
the seven skies
to reach a boundary
An angel hands me
a dress
A dress that changes me
to suit the ambiance
Two rooms
were then shown
I was ordered

to interact
with one of the
two there
In one was God
and in the other
the Devil
I chose God
What could I have
done with the Devil?
For further updates
it's necessary
to break another night
to enter the rest of the dream

Sri 10:08 | 22.12.2017 | Noida

# இருவரில்

திடீரென இரண்டு பறவைகள்
தூக்கத்தில் இருந்த
என்னை எழுப்பின
சன்னல் திறந்து கிடந்தது
அதன் வழியாக
ஏழு வானங்களையும் தாண்டி
ஒரு எல்லையை அடைகிறேன்
என்னிடம்
தேவதை ஒருத்தி ஆடை ஒன்றை தருகிறாள்
ஆடை அந்த இடத்திற்கு தக்கவாறு
என்னை
மாறிக் கொள்கிறது.

பின் இரண்டு அறைகள் காட்டப்பட்டன
அதில் உள்ள
இருவரில் ஒருவருடன் பழகப் பணிக்கப் பட்டேன்
ஒன்றில் கடவுளும்
மற்றொன்றில் சைத்தானும் இருந்தார்கள்
நான் கடவுளை தேர்ந்தெடுத்தேன்
சைத்தானை
நான் என்ன செய்திருக்கக்கூடும்
மேலதிக செய்திகளுக்கு மற்றொரு
இரவை உடைத்து
மீதிக் கனவிற்குள் நுழைய வேண்டியிருக்கிறது.

# THE OCEAN'S WINGS

Every time
that I look
at the ocean
it is flying
on its wings
To first ascertain
from where
the ocean
got its wings
the soul may get compressed
into a barren memory
Like this
a thousand memories
have gone barren
Being a useless person

today too
I love the ocean
I go nearer and kiss
A wave slaps
into my face
Within me
the ocean's wings
wash ashore
Now
waves that
don't leave the ocean
are its wings
notes a reader.

Sri 10:24 | 19.12.2017 | Noida

## கடல் ரெக்கைகள்

ஒவ்வொரு முறையும்
நான் இந்த கடலை
பார்க்கின்ற போதெல்லாம்
கடல் ரெக்கைகள் கொண்டு
பறந்து கொண்டுதான் இருக்கிறது
முதலில்
கடலுக்கு ரெக்கைகள்
எங்கிருந்து வந்திருக்கும்
என்பதை உறுதி செய்து கொள்ள விரும்பி
ஆன்மா இறுகப்பட்டு
அது மலட்டு நினைவாக மாறிவிடும்.
இப்படி இப்படியாக
ஆயிரம் நினைவுகளுக்கு

மலட்டுத் தன்மை இருந்திருக்கிறது
வெட்டிப் பயல் என்பதால்
இன்றும் கடலைக் காதலிக்கின்றேன்
அருகில் சென்று முத்தமிடுகின்றேன்
அலையொன்று என் முகத்தில் அறைகிறது
எனக்குள் கரையொதிங்கியது
கடலின் ரெக்கைகள்.
இப்போது
கடலை விட்டு வெளியேறிச் செல்லாத
அலைகள்தான்
கடலின் ரெக்கைகள் என
வாசகன் ஒருவன் குறிப்பெழுதிக் கொள்கிறான்.

## By memories

At the first stop
I stand
The bus you mentioned
has come
I have not boarded it
Next to the window
a seat is available
I am not seated there
I must have crossed
the city's midnight
Two different
routes
I have not chosen
anyone
Whatever chosen
it's only the busdriver
who will take it
While enquiring
about the city
the bus

did not move
here and there
I was about to fall
down a gate
A reader caught hold of me.
I think that this must be
the last stop of the city
A new reader shows
the house
It's made out of
birds feathers
Why have I come
to this house
on board memories
instead of on a bus
The poem
you are reading
I am going to write
here only

Sri 23:13 | 18.12.2017 | Noida

# நினைவுகளால்

முதலாம் நிறுத்தத்தில்
நிற்கிறேன்
நீ சொன்ன
பேருந்து வந்துவிட்டது
நான் அதில் ஏறவில்லை
சன்னலுக்கு அருகில்
இருக்கை கிடைத்திருக்கிறது
நான் அதில் உட்காரவில்லை
நகரத்தின் நிசி கடந்திருப்பேன்
வித்தியாசமாக
இரண்டு பாதைகள்
நான் எதையும் தெரிவு செய்யவில்லை
எதை தெரிவு செய்தாலும்
பேருந்தை நடத்துனன்தான் கொண்டு செல்ல
போகிறான்
ஊரை விசாரித்துக் கொண்டிருக்கும் போது

பேருந்து அங்கும் இங்கும் அசையவில்லை
நான் வாசலில் விழப் பார்த்தேன்
ஒரு வாசகன் என்னை பிடித்துவிட்டான்
இது நகரத்தின்
கடைசி நிறுத்தமென நினைக்கிறேன்
புதிய வாசகன் ஒருவன்
வீட்டை காட்டித் தருகிறான்
பறவைகளின் ரெக்கைகளால்
அது அமைக்கப்பட்டிருக்கிறது
இந்த வீட்டுக்கு ஏன்
பேருந்தில் ஏறாமல் நினைவுகளால்
ஏறி வந்திருக்கிறேன்
நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும்
கவிதையை இங்கு வைத்துதான்
நான் எழுதப் போகிறேன்.

## Fish mind

Because I didn't know how to swim
friends
won't let me into the pool
and swim
They dived into the water
and began to frolic
The mind started
to wander all over
Without anyone knowing
the mind changed into a fish
plunged into the pool
and jumped over them
They tried a lot
to catch the fish

but could not.
The fish dunked
and jumped
not just once but many times.
Alas! They couldn't catch the fish.
Time passed there quite interestingly
Unable to catch the fish
the friends got out of the water.
Since the fish was imaginary,
I got out of the water
before they did.

Sri 23:28 | 17.12.2017 | Noida

## மீன் மனசு

எனக்கு நீச்சல் வராது என்பதால்
நண்பர்கள்
என்னை குளத்தில் இறங்கி
நீச்சலடிக்க விடவில்லை
அவர்கள் குளத்தில் குதித்து
விளையாட தொடங்கினார்கள்
அங்குமிங்கும் மனசு பறந்தலைந்தது.
யாருக்கும் தெரியாமல்
மனசு மீன் ஒன்றாக மாறி
குளத்தில் குதித்து
அவர்களுக்கு மேலால் குதித்துக் கொண்டிருந்தது

அவர்கள் மீனை பிடித்துவிட வேண்டுமென
பல முயற்சிகள் செய்தும் முடியவில்லை
நீரினுள் ஒரு முறைக்கு பல முறை
அமுந்தி மேலெழும்பியது மீன்
ஐயோ இந்த மீனை பிடிக்க முடியவில்லை என்றார்கள்
சுவாரஸ்யமாக அங்கு நேரம் கழிந்தது
நண்பர்கள் மீனை பிடிக்க முடியாதவர்களாகவே
கரையேறினார்கள்
மீன் என்பது கற்பனை என்பதால்
அவர்களுக்கு முன்
குளத்திலிருந்து கரையேறிவிட்டேன்.

## WHAT'S CALLED NIGHT

I had to change
into a long night
Change so as to
get to a collection
of various events
Now
I am a long night
The humming of insects
Meandering in a close crawl
is the Moon
This afternoon
the Sun must have broken apart
That's why here and there
stars have sprouted
Or my Princess's smile

must have been disturbed
Some sleepless birds
carry me hither and thither
in their beaks
I wander in flight
People with no work
drag me along with them
The stench of alcohol too.
It's a big pain to be the night
From this minute
it's only possible to be a human being
So
from the word night
I exit.

Sri 23:38 | 16.12.2017 | Noida

# இரவு எனப்படுவது

நான் ஒரு நீளமான
இரவாக மாறவேண்டியிருந்தது
மாறுவதனூடாக
பல்வேறு நிகழ்ச்சிகளின் தொகுப்பை
கண்டடைய முடியும்.
இப்போது
நான் ஒரு நீளமான இரவு
வண்டுகளின் மெலோடி
ஊர்ந்து உரசி திரிகின்றது
நிலவு
இன்று பகல்
சூரியன் உடைந்திருக்க வேண்டும். அதனால்தான்,
ஆங்காங்கே
நட்சத்திரங்கள் முளைத்திருக்கின்றன

அப்படியில்லையெனில்
என் ராஜகுமாரியின்
புன்னகை கலைந்திருக்க வேண்டும்.
தூங்காத பறவைகள் சில
என்னை அங்குமிங்குமாக
சொண்டுகளில் கொண்டு செல்கின்றன
நான் பறந்தலைகிறேன்
வேலை இல்லாத மனிதர்கள்
தங்களோடு இழுத்துச் செல்கிறார்கள்
சாரய நாற்றம் வேறு.
இரவாக இருப்பது பெரும் வலி
மனிதானாக இருப்பதே
இந்த நிமிடத்திலிருந்து சாத்தியம்
எனவே,
இரவென்ற சொல்லிலிருந்து வெளியேறுகிறேன்

## Leaf's story

A leaf that had
wandered through the city streets
I brought home
and arranged it
like the leaf it was before
The leaf had studied
the big cities
The leaf had been scattered
here and there
like a swear word in the wind
Thus,
the leaf had to flutter afresh
in the wind

A leaf's flutter in the wind
is not a life of freedom
but wandering in a landless emptiness.
Look up a bit
at the tree
Birds live there only
Rest your head on the tree
and take a nap
Someone or the other
will make you out to be
The Buddha.

Sri 00:12 | 15.12.2017 | Noida

# இலையின் கதை

நகரத்தின் தெருக்களில்
அலைந்து திரிந்த இலை ஒன்றை
வீட்டுக்கு எடுத்து வந்து
அதனை
முன்னர் இருந்த இலை போலவே
ஒழுங்குபடுத்தினேன்
இலை பெருநகரங்களை படித்திருந்தது
இலையை பலரும்
ஒரு கெட்ட வார்த்தையை போல்
அங்கும் இங்குமாக காற்றில்
அலையவிட்டிருந்தார்கள்
அதன்படி

இலை புதிது புதிதாய்
காற்றில் அலைய வேண்டியிருந்தது
இலை காற்றில் அலைவதென்பது
சுதந்திரமான வாழ்க்கையல்ல
நிலமற்ற வெளியில் அலைதல்.
கொஞ்சம் மரத்தை
அண்ணார்ந்து பாருங்கள்
பறவைகள் அங்குதான் வசிக்கின்றன
கொஞ்சம் மரத்தில் தலை வைத்து
தூங்கிப் பாருங்கள்
யார் யாரோ
உங்களை புத்தனாக்கி செல்வார்கள்.

# World

Leftover world
was being taken away
by ants that came later
goes a fable
Ants
that came earlier
had finished eating
three quarters
of the world
So, the last smile
of the world,
like the last days of life
of a film actress,
was changing

From the leftover world
a new world
had to be made
According to the fable
I transformed myself
into an ant
Battled the ants
and delicately
retrieved the world
It was tiny enough
to be cupped
in my palms.

Sri 23:29 | 13.12.2017 | Noida

## உலகம்

மீதியிருந்த உலகத்தை
பிந்தி வந்த
எறும்புகள் எடுத்துச் செல்வதாக
ஒரு கதை
முந்தி வந்த
எறும்புகள் உலகத்தின்
முக்கால் வாசியை
தின்று முடித்திருந்தன
எனவே,
உலகத்தின் கடைசிப் புன்னகை
ஒரு சினிமாக் காரியின்

இறுதிக் கால ஆயுள் போல்
மாறிக் கொண்டிருந்தது.
உலகத்தின் மீதியைக் கொண்டு
புதிய உலகம் உருவாக்க வேண்டியிருந்தது
கதைப்படி
என்னை எறும்பாக மாற்றிக் கொண்டேன்
எறும்புகளுடன் போராடி
உலகத்தை லாவகமாக மீட்டெடுத்தேன்
இப்போது
என் உள்ளங் கைக்குள் பொத்தி வைக்கும்
அளவிற்கு மிக சிறியதாய் இருந்தது.

# Final plot

Every kind of
my desire
is lying unconscious
only at the centre point
of the first plot
I am attempting to forget
that a plot is waiting for me
like a bird perching
on the branch of a tree
The copy
earmarked for me,
its silent reading,
the apples growing
on that plot
and my favourite
wine goblet
are there only
I am denying
the I in me knowing
that my first plot
is like a butterfly

flying in a blank paper
and a colourless dispersal
Returning home is very
necessary
To end where it began
is another plan
for birds returning
to their nests
and so also for the monkeys living in forests
Even then, I prefer remaining
as one who doesn't like to go back home.
My final plot is waiting
grabbing myths
I am still jumping
upon the first plot
I have come to like
living with cannibalistic devils
Pardon me!
I am a typo

Sri 04:42 | 12.01.2018 | Noida

# இறுதி நிலம்

எனது எல்லாவிதமான அவாவுதலும்
முதல் நிலத்தின் மையப் புள்ளிக்குள் மாத்திரமே
மயக்கமுற்றுக் கிடக்கிறது.
எனக்கான நிலமொன்று
வானக் கிளையில் அமர்ந்து
பறவை போல காத்திருப்பதை
மறக்கவே எத்தனிக்கிறேன்.
எனக்கான பிரதியும்
அதன் நிசப்த வாசிப்பும்
அந்நிலத்தில் விளையும்
ஆப்பிள் கனிகளும்
நான் விரும்பிய உயர்ந்த மதுக்குவளையும்
அங்குதான் இருக்கின்றன.
எனது முதல் நிலம்
வெற்றுத்தாளில் பறக்கும்
வண்ணத்துப் பூச்சியை ஒத்ததும்
வண்ணமற்றதுமான நிறப் பிரியை
என்பதை எனக்குள்ளிருக்கும்

நான் அறிவதற்கு
மறுப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன்.
வீடு திரும்புதல் மிக அவசியமானது
ஆரம்பித்த இடத்தில் முடிப்பதே
பறவைகளின் கூடு திரும்புதலின்
இன்னுமொரு யுக்தி
வனத்தில் வாழும் குரங்குகளும் அப்படித்தான்
எனினும் நான்
வீடு திரும்ப விரும்பாதவனாய்
இருக்கவே விரும்புகிறேன்.
எனது இறுதி நிலம் காத்துக் கிடக்கிறது
தொன்மங்களை அள்ளிக் கொண்டு
நான் முதல் நிலத்திலேயே
தாவிக் கொண்டிருக்கிறேன்
நிணம் தின்னும் பிசாசுகளுடன்
வாழ்வது எனக்குப் பிடித்துப் போய்விட்டது.
மன்னிக்க,
நான் என்பது எழுத்துப் பிழை.

# Migration

Leaving forests behind
wishing to live in the cities
birds hunted for a place
to build nests.
People began to perceive
birds made up as nomads.
The birds located their residences
in temples and tall buildings.
People attached the term
nomads to the feathers
and let the birds fly.
Day by day, the incidents
increased.
At that very moment,

heartbroken birds
landed on heads
like glass shards.
The next instant,
the birds left the cities
and reached forests.
One day,
they lay
as rotting dead bodies
in a disaster.
People became
long distance travellers
bound for forests.

Sri 08:55 | 19.01.2018 | Chennai

## இடம்பெயர்வு

காடுகளை விட்டுப் பறவைகள் வெளியேறி
நகரங்களுக்குள்
வசிக்க விரும்பி அங்கு
கூடுகளை அமைக்க இடம் தேடியலைந்தது
மனிதர்கள் பறவைகளை
நாடோடிகளைப் போல்
ஒப்பனை செய்து பார்க்கத் தொடங்கினார்கள்
ஆலயங்கள், உயர்ந்த கட்டிடங்கள் என
பறவைகள் தமது இருப்பிடங்களை
அமைத்துக் கொண்டன
பறவைகளின் ரெக்கைகளில்

நாடோடிகள் என்ற வாசகத்தை பொருத்தி
பறக்க விட்டார்கள் மனிதர்கள்
நாள்தோறும் சம்பவம் வளரத் தொடங்கியது
அக்கணங்களில் கண்ணாடித் துண்டுகளாய்
பறவைளின் மனங்கள் உடைந்து
தலைகளில் இறங்கின
மறுகணமே பறவைகள் நகரங்களை விட்டு
வெளியேறி காடுகளை வந்தடைந்தன
ஒரு நாள்
நகரங்கள் அனர்தத்தில் அழுகி சடலமாய் கிடந்தன
மனிதர்கள் காடுகளை நோக்கிய
நெடும் பயணிகளானார்கள்.

## Reaching the Summit

Doubts abound
about how the butterfly
flew up
to the mountain top.
How could a butterfly
reach a mountain high?
It's not an eagle-like bird
or, to say the least,
a member of the
sparrow species.
Someone must have
lowered the mountain
and placed the butterfly
on top.
If not,
the daughter must have
raised the butterfly
on to the summit.
That's the beauty why
the line drawing
has come out well.

Sri 09:52 | 20.01.2018 | Chennai

## மலையை அடைதல்

மலை உச்சியின் மீது
அந்த பட்டாம் பூச்சி எப்படி பறந்து
வந்திருக்குமென்பதில்
எனக்கு நிறைய சந்தேகங்கள் இருந்தன
பட்டாம் பூச்சியால் எப்படி
ஒரு மலையை அடையமுடியும்
பட்டாம் பூச்சி
கழுகு போன்றதொரு பறவையோ
அப்படியில்லையெனில்
குறைந்த பட்சம் சிட்டுக் குருவியை ஒத்த
ஒரு இனம்கூட இல்லை
ஒன்று மலையைத் தாழ்த்தி
பட்டாம் பூச்சியை அதன் மேல் வைத்திருக்க
வேண்டும்
அப்படியுமில்லையெனில்
பட்டாம் பூச்சியை தூக்கி
மலை மேல் வைத்திருக்க வேண்டும் மகள்
அதன் அழகுதான் கோட்டோவியம்
நன்றாக வந்திருக்கிறது.

# Tortoise and the Hare

A tortoise
drenched in the sandy vastness
foraging for food
gets dragged away
in the cruel claws
of an eagle
Before raising higher
Into the clouds and disappear
I pray for the tortoise
to fall down
My son is adamant
about preparing at the earliest
for a running race
between the tortoise and the hare
Else
his line drawing
may get dissolved
in the rain

Sri 09:56 | 28.12.2017 | Chennai

## ஆமையும் முயலும்

மணல் வெளியில்
நனைந்தபடி
தன் இரையைத் தேடியலையும்
ஆமையொன்றை
கழுகொன்று தன் கோர நகங்களால்
இழுத்துச் செல்கிறது
உயர்ந்து மேகமாகி மறையும் முன்
ஆமை விழுந்துவிட வேண்டுமென.
பிரார்த்திக்கிறேன் நான்
மிக விரைவில்
ஆமையும முயலும்
ஓட்டப் போட்டிக்கு தயாராக வேண்டுமென்பதில்
பிடியாக இருக்கிறான் மகன்
அல்லாவிடில்
மழையில் நனைந்து
கரைந்துவிடுமாம் அவனது கோட்டோவியம்.

# Secret pain

As all nights
turn yellow
and migrate
into my copy
the loneliness of the previous night
accidentally crashes into them
That loneliness had initiated
the story of a forest
through which
a secret pain
that sprouted all over the flesh
as trees with wide spread branches
occupied
Some apes residing with me
jump from the branches
to start reading my secret pain
all over the city
I run
with the colours of the night
into the loneliness of the previous night

Sri 22:38 | 29.12.2017 | Chennai

## ரகசிய வலி

மஞ்சள் நிறமாய்
இடம்பெயர்ந்து என் பிரதிக்குள்
எல்லா இரவுகளும்
கடந்து செல்ல
அதனுடன் மோதி விபத்துக்குள்ளாகிறது
முந்தின இரவின் தனிமை
அந்த தனிமை ஒரு கானகத்தின்
கதையை துவங்கி வைத்திருந்தது
அதனூடாக
ஒரு ரகசிய வலி
சதையெங்கும் மரமாய் முளைத்து
கிளைகள் பரப்பி ஆக்ரமிக்க
என்னுடன்
வாழ்ந்து வந்த குரங்குகள் சில
கிளைகளில் இருந்து தாவி
நகரமெங்கும்
என் ரகசிய வலியை
வாசிக்க துவங்கியிருக்கின்றன
நான் இரவின்
நிறங்களுடன் ஓடிக்கொண்டிருக்கிறேன்
பிந்தின இரவின் தனிமைக்குள்.



A. Nasbulla born in periya Kinniya on 1st of November 1974. he was educated in Arafa maha vidyalayam Kurinchakkerny. he was a very enthusiastic student in writing poems from his school days. his enthusiasm has made him as a modern poet right now !

Today poet A. Nasbullah is known well to his readers. he has so far presented nine anthologies and a collection of short stories.

The Indian famous weekly, "Aanatha vihaden " also welcomes his modern poetries in order to publish in their magazine. readers can experience that poet A.Nasbullah how nicely composing his poems through the modern way !

And this is why mister Sri N Srivatsa an Indian writer has chosen A. Nasbullah's poems for translate in English. all the poems in this anthology have been translated very beautifully. as well as poet A. Nasbullah also has created his poems with utmost elegance.

This is the first collection of modern poems which was translated from Tamil to English language by an Indain writer.

**A.M.M. Ali**

ISBN 978-955-7181-

**Rs. 350/-**